மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Christianity in Koveru Kazhuthaigal Noval

Y. Chithra

Ph.D. Researcher, Department of Tamil, Field of Languages, Vels Institute of Science, Technology and Advanced Studies, Chennai, India

Manuscript ID : **MT127A0056**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 29.09.2022
Revised: 17.10.2022
Accepted: 05.11.2022
Published: 23.11.2022

Pages : 137-149

DOI: 10.5281/zenodo.7372646

ABSTRACT:

Tamil is one of the rich literary languages. The role of religions in laying the foundation for the development of Tamil language literature is very important. There is an opinion among Tamil scholars that religions have been enriched by Tamil and Tamil by religions. The role of Christians is very important in the history of Tamil literature. From the sixteenth century till today, many Christian literatures, grammars and dictionaries have appeared in Tamil. The glory of creating Christian literature belongs to the priests of the Western countries and the Tamil scholars. In such a Christian period, Tamil scholars are composing various books based on the biblical ideas. In this way, this review shows how the Biblical ideas can be found in the Koveru Kazhuthaigal Noval written by the author Imayam.

KEYWORDS:

Novel, Koveru Kazhuthaigal, Misery, Religion, Marriage, Marginal Status Mandar.

கோவேறு கழுதைகள் புதினத்தில் கிறித்தவம்

ஏ. சித்ரா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, மொழிகள் புலம், வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழ்மொழி இலக்கிய வளம் நிறைந்த மொழிகளுள் ஒன்று, தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு அடிதளமிட்டதில் சமயங்களின் பங்கு இன்றியமையாதாகும். தமிழால் சமயங்களும், சமயங்களால் தமிழும் வளம் பெற்றது என்ற கருத்து தமிழறிஞர்களிடையே நிலவி வருகிறது. கிறித்தவர்களின் பங்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமானதாகும். பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை பல கிறித்தவ இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள் தமிழில் தோன்றியுள்ளன. கிறித்த இலக்கியங்களைப் படைத்தளித்தப் பெருமை மேலைநாட்டு பாதிரிமார்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் சாரும். இவ்வாறான கிறித்தவ சமயத்தில் திருவிவிலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நூல்கள் தமிழறிஞர்கள் இயற்றி வருகிறார்கள் அந்த வகையில் ஆசிரியர் இமையம் இயற்றிய கோவேறு கழுதையில் திருவிவலியக் கருத்துக்கள் எவ்வாறு காணப்பெறுகிறது என்பதை இவ்வாய்வு எடுத்துக்கூறுகிறது.

கருச்சொற்கள்

புதினம், கோவேறு கழுதைகள், அவலம், சமயம், திருமணம், விளிம்பு நிலை மாந்தர்

முன்னுரை

கிறித்தவம் உலகச் சமயங்களுள் ஒன்றாக திகழ்கிறது. கிறித்தவர்களின் புனித நூல் திருவிவிலியம். திருவிவிலியம் சமூகத்தில் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற வாழ்க்கைக்கு உகந்த கருத்துக்கள், நெறிமுறைகளை எடுத்துக்கூறுகிறது. இது இயேசு கிறித்துவின் பிறப்பு, வளர்ப்பு போதனைகள், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய நிகழ்ச்சிகளைக் கிறித்தவச் சமயம் எடுத்துரைக்கின்றது. இந்த கோவேறு கழுதைகள் என்ற புதினத்தில் கிறித்தவச் சமயக் கருத்துக்கள் எவ்வாறு அமைகிறது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமயம்

மக்களுக்கு பாதுகாப்பாக, பண்பாட்டின் உறைவிடமாகக் காலங்காலமாகக் கூறுவது சமயமாகும். மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரை ஒவ்வொரு நிலையிலும் இன்றியமையாதச் சிறப்பிடம் பெறுவது சமயம். சமயம் சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு அமைப்புகளில் ஒன்றாகும். மக்களை நல்வழிப்படுத்தி, உயர்ந்த பண்புடையவர்களாக்கி இவ்வுலக்கில் ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து, பேரின்ப நிலையில் நித்திய இன்பத்தை அடையச் செய்வதே சமயமாகும். சமயம் சமூக மக்களால் பெரிதும் பின்பற்றப்படுகின்ற ஒன்று அனைத்து மக்களாலும் பின்பற்றப்படுவதால் பெருவளர்ச்சியுற்றுச் சிறந்த செல்வாக்குடன் விளங்குகிறது. அனைத்துச் சமயங்களும் இறைவனுடைய புகழைப் பரவச் செய்யும் நோக்கத்தோடு திகழ்கிறது. சமூகத்தில் வாழ்கின்றது மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் கிடைக்க செய்தல், மனித நேய மிக்கவர்களாக வாழச் செய்தல், இறைத் தொண்டுகளில் ஈடுபட்டு மறுமையில் இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு வழிவகைகளை எடுத்துக் கூறுதல் போன்ற நெறிமுறைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அந்த வகையில் சிறப்பிடம் பெறுவது கிறித்தவ சமயமாகும். பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை கிறித்தவர்கள் செய்தத் தொண்டு மொழித்துறையிலும், இலக்கியத்துறையிலும் இன்றளவும் ஏற்றுக்கொள்ளும் விதமாக உள்ளது. அதில் மிக குறிப்பிடத்தக்கவை அச்சுக்கலை மொழி பெயர்ப்புகள், இதழியல், கல்வி நிறுவனங்கள் உருவாக்குதல், எழுத்து சீர்த்திருத்தம் போன்றவை மிகமுக்கியப் பணியாகும். மனிதர்களுக்காக மனித வாழ்வின் நுணுக்கங்களை, நடைமுறைகளை, நம்பிக்கைகளை விளக்கவதற்காக மனிதர்களாலேயே உருவாக்கப்பட்டதே சமயமாகும்.

கிறித்தவம்

கிறித்தவ சமயம் உலக அளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது. திருவிவிலியம் கிறித்தவ மக்களின் புனித நூலாக விளங்குகிறது. திருவிவிலியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கிறித்தவச் சமய வரலாற்றைக் கூறுகிறது. திருவிவிலியம் ஆங்கிலத்தில் பைபிள் (The Holy Bible) எனப் பெயர் பெறுகிறது. திருவிவிலியம் விவிலியம், வேதம், வேதப் புத்தகம், மறைநூல், சத்திய வேதம், வேதாகமம், பரிசுத்த வேதாகமம், திருமறை நூல் என்ற பல்வேறு வேறு பெயர்களாலும் அழைக்கப்பெறுகிறது.

திருவிவிலியம் பழைய ஏற்பாடு (Old Testament), புதிய ஏற்பாடு (New Testament) என்ற இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கியது. பழைய ஏற்பாட்டிற்கு 'எபிரேய விவிலியம்' (Hebrew Bible) என்ற வேறொரு பெயருமுண்டு. திருவிவிலியம் பல்வேறு நூல்களின் தொகுப்பாக விளங்குகிறது. பழைய ஏற்பாடு முப்பத்தொன்பது நூல்களையும் புதிய

ஏற்பாடு இருபத்தேழு நூல்களையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு நூலும் பல அதிகாரங்கள் (Chapters) கொண்டு விளங்குகிறது. பழைய ஏற்பாட்டில் தொள்ளாயிரத்து இருபத்தொன்பது அதிகாரங்களும் புதிய ஏற்பாட்டில் இருநூற்று அறுபது அதிகாரங்களும் மொத்தம் ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது அதிகாரங்கள் உள்ளன. அதிகாரங்கள் பல வசனங்களைக் (Verses) கொண்டதாக விளங்குகிறது. பழைய ஏற்பாட்டில் இருபத்து மூன்றாயிரத்து நூற்று நாற்பத்தைந்து வசனங்களும் புதிய ஏற்பாட்டில் ஏழாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழு வசனங்களுமாக மொத்தம் முப்பத்தொன்றாயிரத்து நூற்றிரண்டு வசனங்கள் உள்ளன. இத்திருமறை மொத்தம் நாற்பது எழுத்தாளர்களால் உருவாக்கப் பெற்றது. எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் ஆரம்ப காலத்தில் இருந்த பைபிள், பின்னர் கிரேக்க மொழியில் மொழி மாற்றம் செய்யப்பெற்றது. காலம் செல்லச் செல்ல உலகில் உள்ள பல மொழிகளிலும் பைபிள் மொழி பெயர்க்கப் பெற்றன. உலக அளவில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ள நூல் பைபிள் என்பது அதற்குரிய தனிச்சிறப்பாகும்.

திருவிவிலியத்தில் கூட சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் புறந்தள்ளப் பட்டவர்களைப் பற்றியும், கடைநிலை மாந்தர்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. கோவேறு கழுதைகள் என்ற சொல் பரிசுத்த வேதாகமத்தில் 7 தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது. 2 இராஜாக்கள், 5:17, 1 நாளாகமும் 12:40, எஸ்றா 2:66, நெகேமியா 7:68, எஸ்தர் 8:10, எஸ்தர் 8:14, சகரியா 14:15.

புதினம்

அச்சுப் பொறிகளின் பெருக்கத்தால் ஏற்பட்ட உரைநடையின் பெருக்கம், கவிதைக் கதைகளை உருமாற்றி உரைநடை வடிவம் கொள்ள வைத்தது. இக்கதை வடிவத்தோடு செவிவழியாகக்கூறி வந்த பேச்சுமொழியாலான மக்கள் கதைகளும் ஒன்றாக இருந்ததால் ஏற்பட்ட புதிய வடிவமே புதினம். சிறுகதையைத் தனிப்பாடல் என்றால், காப்பியத்தைப் புதினம் என கூறுதல் வேண்டும். பாட்டு, உரைநடை என்ற வடிவ வேறுபாடுகளுக்குப்பால், காப்பியமும் புதினமும், கதைக்கரு, கட்டமைப்பு, மாந்தர் படைப்பு, வருணனை ஆகியவற்றால் பின்னிபிணைந்து புதினம் காட்சியளிக்கிறது.

“கதை கேட்பதென்பது மனிதனிடத்தில் ஆதிகாலம் முதற்கொண்டு இருந்து வரும் இயல்பு. வாய்மொழியாக ஒருவன் சொல்ல, அதை வேறு ஒருவன் கேட்டு இன்புற அப்படி இன்புற்றவன் தான் கேட்டதை மற்றவர்ளுக்குச் சொல்ல, இப்படியே கதைகள் படர்ந்து வந்தன என்று கி.வா. ஜகநாதன் குறிப்பிட்டுள்ளார்.”[1]

“உலக வாழ்க்கையைக் கண்ணாடி போன்று பிரதிபலித்துப் பெரும்பாலும் அநுபவத்தோடொத்து நிகழும் கதைகளை “நாவல்” என்ற மேல் நாட்டார் கூறுவர்.”[2]

இமையம்

"கோவேறு கழுதைகள்" என்ற நாவல் ஆசிரியர் இமையம். கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி வட்டத்திலுள்ள கழுதூர் என்ற கிராமத்தில் 10.03.1964ஆம் ஆண்டு பிறந்தார். இமையத்தின் பெற்றோர் வெங்கட்டன் சின்னம்மாள். இவர்களின் சொந்த ஊர் மேல் ஆதனூர் என்ற கிராமம் ஆகும். பல ஆண்டுகளுக்கு முன் கழுதூர்க்கு குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இமையத்திற்கு பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் அண்ணாமலை, இமையத்திற்கு நான்கு வயதுவரை வாய்ப்பேச முடியாத காரணத்தால் திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையாருக்கு வேண்டிக்கொண்டனர் அவரின் பெற்றோர்கள். இமையத்திற்குப் பெற்றோரால் இடப்பட்ட பெயர் அண்ணாமலை என்பதாகும். ஆனால் தன்னுடைய இலக்கியப் படைப்புகளுக்கு இமையம் என்ற பெயரினை பயன்படுத்தி வருகின்றார்.

இமையம் நவீன இலக்கியமான புதுக்கவிதை, சிறுகதை, புதினம் என பல்துறையிலும் தன்னுடைய படைப்புகளைப் படைத்துள்ளார். 1986-ஆம் ஆண்டு முதல் இலக்கியத்தில் நாட்டம் கொண்டு, இமையத்தின் கல்லூரி ஆசிரியர்களான எஸ். ஆல்பர்ட், சு. பூர்ணச்சந்திரன் என்பவர்களால் இலக்கிய உலகிற்கு அறிமுகமனார். இமையத்தின் முதல் படைப்பு பயணங்கள் என்ற நாடகமாகும். அப்படைப்பு 'வெளி' என்ற நாடக இதழில் வெளியானது. இமையம் இதுவரை நான்கு சிறுகதைத் தொகுப்புகளும் பலபுதினங்களும் எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். குறிப்பாக செல்லாத பணம் நாவலுக்கு சாகித்ய அகடாமி விருது கிடைக்கப்பெற்றுள்ளது. கோவேறு கழுதைகள் என்ற புதினத்திற்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் சார்பாக 1994ஆம் ஆண்டுக்கான குப்பம்மாள் நினைவுப் பரிசினையும் கோவேறு கழுதைகள் நாவலுக்குக் கிடைத்துள்ளது.

"கோவேறு கழுதைகள்" என்ற நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு லட்சுமி ஹாம்ஸ்டார்ம் என்பவரால் (Beast of Burden) என்ற தலைப்பில் வெளியானது. பதிப்பகம்: East West Books. "கோவேறு கழுதைகள்" என்ற நாவலுக்காக 'அக்னி' என்ற இலக்கிய அமைப்பின் சார்பாக 1994ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்னி விருதை திரு. கமலிதாஸ் அவர்கள் வழங்கினார். பல்வேறு விருதுகள், பல்வேறு படைப்புகளை நவீன இலக்கிய படைப்பாளர்களின் வரிசையில் தனிச்சிறப்பிடப் பெறுகிறார் ஆசிரியர் இமையம். இவரின் படைப்பான கோவேறு கழுதைகளில் கிறித்தவக் கருத்துகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விளிம்பு நிலை மாந்தர்

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களைக் குறிக்கும் சொல் விளிம்பு நிலை மக்கள் ஆகும். தலித்துக்கள், நாடோடிகளாகத் திரிவோர், பழங்குடிமக்கள், அலிகள், அகதிகள், கொள்ளையர்கள், கழைக் கூத்தாடிகள், வண்ணான், கதைப்பாடகர்கள், கலைஞர்கள், விலங்குகளைப் பழக்கி வித்தைக் காட்டுவோர், கதை சொல்லிகள் சோதிடர்கள், நாடோடிகள் போன்றவர்களே விளிம்புநிலை மாந்தர்கள் ஆவர்.

“பார்ப்பணர், பார்ப்பனர்ல்லாதவர்கள் என்ற இருபெரும் பிரிவுகளைச் சாரதவர்கள் தலித்துகள், தலித் என்போர் ஒடுக்கப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் - சூத்திரர் இந்த தலித்துகளே விளிம்பு நிலைச் சார்ந்தவர்கள்.”[3]

என்று மணிகோ. பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார் இமையத்தின் படைப்பான கோவேறு கழுதைகள் என்ற புதினத்தில் துணி வெளுத்தல் துணி வெளுப்போர் வண்ணார் சமூகத்தால் செய்யும் விளிம்பு நிலை மக்கள் பற்றி பேசப்பட்டுள்ளது. கிறித்தவ சமயத்தின் புனித நூலாக விளங்கும் திருவிவிலியத்தில் கூட விளிம்பு நிலை மாந்தர் பற்றி பேசப்பட்டுள்ளது. கோவேறு கழுதைகள் முதன்மைப்படுத்தும் பாத்திரங்களின் வழி விவிலியக் கருத்துக்களை இமையம் கூறியுள்ளார்.

கோவேறு கழுதைகள் புதினம்

கோவேறு கழுதையின் ஆசிரியர் இமையம். இப்புதினத்தில் புதிரை வண்ணார் என்ற சாதியைச் சார்ந்தவர். இவர்கள் நாடோடிகளாக வலம் வருபவர்கள். இவர்கள் விளிம்பு நிலை மக்களாகவும், ‘தலித்’ மக்களாகவும் காணப்படுகிறார்கள். புதிரை வண்ணான் என்ற இனத்தைச் சார்ந்தவர்கள் ஒரேயொரு குடும்பம் என்ற நிலையில் தனித்து வாழ்ந்துப்பழகியவர்கள். இக்குடும்பத்தில் ஆறு முதல் ஏழுவரை என்ற எண்ணிக்கையில் குடும்ப உறுப்பினர்கள் இருப்பர். இப்புதினத்தில் ஆரோக்கியம், கணவன் சவுரி, மகன் ஜோசப், மகள் மேரி, சிறிய மகன் பீட்டர் மொத்தம் ஐந்து நபர்கள் இவர்களின் குடும்ப உறுப்பினர்களாகக் காட்டப்பட்டுள்ளது. இவர்களின் ஒட்டுமொத்த தொழில் துணிவெளுத்தல் என்பதாகும்.

கோவேறு கழுதைகள் என்ற புதினத்தின் வழியாக கீழ்ச்சாதி வண்ணான் (காலணித் தெரு வண்ணான்) சமூகத்தினர் செய்யும் தொழில்கள் என்று குறிப்பிடப்படுபவை துணித்துவைத்தல், கிழிந்தத்துணிகளைத் தைத்தல், சாவு வீட்டில் சடங்குகள் செய்தல், குழந்தைப் பிறப்பு மற்றும் பூப்படைந்த வீடுகளில் தீட்டுச் சடங்குகள் போன்றவற்றில் பங்கேற்பு, திருவிழாக்களில் வேலை செய்தல், களம் தூற்றுதல் போன்ற கூலி வேலைகளைச் செய்தல் இவற்றின் வருமானங்களைக் கொண்டு ஆரோக்கியம் இக்குடும்பத்தைப் பேணி பாதுகாத்து வந்ததாக புதினம் மூலம்

அறிய முடிகிறது. தாய்மை உணர்வோடு, குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வருதல், பிள்ளைகள் பெற்றோர்களை விட்டு பிரிந்து போய்விடக் கூடாது என்பதை ஆரோக்கியம் கதாப்பாத்திரத்தின் மூலம் அறியமுடிகிறது.

கிறித்தவ சமய புனித நூலான திருவிவிலிய சிந்தனையும் கோவேறு கழுதைகள் என்ற புதினத்தில் ஆசிரியர் இமையம் கூறியுள்ள கதாப்பாத்திரங்களின் வழி ஒத்திருக்கும் ஒப்புமைக் கருத்துக்களை இக்கட்டுரை ஆய்கிறது.

1. வழிபாடு

முன்பு ஒரு காலத்தில் தலித்கள் கோயில்களில் அனுமதிக்காமல் இருந்தனர். இன்றைய காலகட்டத்தில் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். கோவேறு கழுதையில் மேல்நாரியப்பனூர் அந்தோணியர் கோவிலுக்கு குடும்பத்தோடு கோவில் சென்று வழிபட ஆரோக்கியத்திற்கு ஆசை.

“திங்கறதுக்குச் சோறும், படுக்கறதுக்கு எடமும் இருக்கிறவுங்களுக்குத்தான் கோவிலு, சாமியெல்லாம், சொந்தம், பந்தமெல்லாம், சூத்துல துணியில்லாதவனுக்கு ஏது”

“சும்மா இருக்கிற காலத்துல கோவிலுக்கு எதுக்கு?”

“துணிய யாரு வெளுக்கிறது”[4]

ஞாயிறு அன்று கோவிலுக்குச் சென்று வழிபடுதல் மரபு. அந்த நாட்களிலும் கோவிலுக்குச் செல்ல அவர்களிடம் காசோ பணமோ இல்லை. இதனால் காலணி மக்களிடம் கேட்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி சத்தம் போடுவார்கள்.

திருவிவிலியத்தில் கோவிலுக்குச் சென்று வழிபடுதலைப் பற்றி கூறும் போது ஆறு நாளும் வேலை செய்ய வேண்டும் ஏழாம் நாள் பரிசுத்த சபை கூடும் நாள் ஓய்வு நாள். அந்த நாளிலே ஒரு வேலையும் செய்யவேண்டாம். ஏழாம் நாளில் கோவிலுக்குச் சென்று வழிபட வேண்டும். புதிய ஏற்பாட்டில் சபை கூடிவருதலைப் பற்றி,

“சபை கூடி வருதலைச் சிலர் விட்டு வருகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்.”[5]

ஏழாம் நாளான ஓய்வுநாளில் கோவிலுக்கு சென்று வழிபட வேண்டும். ஆரோக்கியமும் ஞாயிறு கிழமை குடும்பத்தோடே கோவிலுக்கு செல்ல காலணி மக்களிடம் அனுமதி கேட்கிறாள்.

2. அன்பு

அனுதினமும் நமது வாழ்க்கையில் அனுபவிக்கின்ற ஒன்று அன்பாகும். நாம் ஒவ்வொரு நாளும் ஏதாவது அன்பின் வெளிபாட்டை செய்து வருகிறோம். நம்முடைய அன்பின் வார்த்தைகளால் மற்றவரை ஆறுதல் படுத்துகிறோம் தைரியப்படுத்துகிறோம் மற்றும் சமூகத்தில் தைரியமாய் வாழ இனிய வார்த்தைகள் பேசி உற்சாகப்படுத்துகிறோம். இப்படிப்பட்ட அன்பு நம்முடைய உள்ளத்திலிருந்து தானாகவே வர வேண்டும். அன்பு மற்றவரைக் கட்டாயப்படுத்தி வர வைக்கமுடியாது. விலைகொடுத்து வாங்கவும் முடியாது. இந்த அன்பை நம்முடைய இருதயங்களில் விளையச் செய்கிறவர் தேவன் என்பதை,

“நமக்குள் அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது.”[6]

என்று திருவிவிலியம் கூறுகிறது.

அன்பைக் குறித்துப் பரிசுத்த பவுல் மிகவும் தெளிவாக 1 கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

“அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்மைப் புகழாது. இறுமாப்பாயிராது; அயோக்கியமானதைச் செய்யாது, தற்புகழை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப் படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்”[7]

அன்பு சகலத்தையும் தாங்கக் கூடியதாகவும், சகிக்கக் கூடியதாகவும் காணப்படுகிறது. அன்பு ஒருக்காலும் ஒழியாது. ஆரோக்கியத்தின் குடும்பமும் தொழில் முறையில் வண்ணார் பிரிவை சோர்ந்தவர்களாக இருப்பதால், இவர்கள் வீடுவீடாகச் சென்று பழையத் துணிகளை எடுத்து வந்து, அதை அழுக்கை நீக்கித் தருதல் என்ற நிலையில் துணிகளை வெளுத்து தருகின்றனர். காலணி மக்களுடைய கிழிந்த துணிகளை கையால் தைத்துத் தருகின்றனர்.

ஊரில் யாரவாது இறந்துவிட்டால் சாவு வீட்டிலுள்ள கீழ்நிலைச் சடங்குகள் செய்து தருவது (கீழ்நிலைச் சடங்கு என்றால் பிணங்களைத் தொட்டுக் குளிப்பாட்டுதல் முதலான வேலைகள்) ஊரிலுள்ள மக்களுக்கு மகப்பேரின் போது குழந்தையைப் பெற்றெடுக்கக் கர்ப்பிணி பெண்களுக்குத் துணையாக இருத்தல். புதிதாகப் பூப்படைந்த பெண்களின் வீட்டில் அவர்களுக்கு சடங்குகளைச் செய்வதில் உதவியாக இருத்தல்

“ஒவ்வொரு வீட்டு நல்லதிலும் கெட்டதிலும் தவறாமல் சவுரி குடும்பம் இருக்கும் ...சவுரி துணிகளைக் கட்ட ஆரம்பித்தான் பாடையைச் சுற்றித் துணியைச் சுற்றினாள். இணைப்பதற்குப் பெரியக் கட்டாஞ்சி முள்களைக் கொடுத்தாள். சவுரிபாடை முழுக்கத் துணி கட்டி முடிந்தான். ஆரோக்கியம், பாடையைச் சுற்றித் தென்னங்கீற்றுத் தோரணை கட்டினாள்”[8]

சாவு வீட்டில், இறப்புச் சடங்குகளைச் செய்து வந்தனர் என்பதை அறிய முடிகிறது. ஆரோக்கியத்தின் குடும்பம் இறை அன்பு அவர்கள் இருதயங்களில் இருந்தபடியால் ஊரில் உள்ள மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வந்தனர். **“உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக”**[9] இந்த அன்பு அவர்களிடத்தில் காணப்பட்டதினால் பிறருடைய கஷ்டங்களிலும் இன்ப துன்பங்களிலும் ஆரோக்கியத்தின் குடும்பம் பங்குகொள்ள முடிந்தது.

3. பொறுமை

மனிதர்களாகிய நமக்கு இருக்க வேண்டிய முக்கியப் பண்புகளில் ஒன்று பொறுமை. இன்றைய நவீன காலத்தில் மிகவும் பரப்பரப்பான உலகில் நின்று நிதானித்துச் செயல்பட நேரமற்ற உலகம். எதுவும் உடனே நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற உலகம். மனிதர்களின் அவசரத்திற்கேற்ப உலகம் அவர்களோடு ஒத்துழைக்கிறது. இப்படியே மனிதன் பழகிவிடுவதால் அவன் எல்லாமே உடனே தனக்கு வேண்டுமென்று நினைத்துப் பொறுமையை இழந்துவிடுகிறான். எளிதாக எரிச்சலடைகிறான் கோபப்படுகிறான். பிறரை துன்பப்படுத்துகிறான். இவற்றை விட்டு பொறுமையைக் கையாள வேண்டும் ன்று திருவிவிலியம் கூறுகிறது.

> **“பெருமையுள்ள வனைப் பார்க்கிலும்**
> **பொறுமையுள்ளவன் உத்தமன்”**[10]

என்றும்

நாம் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் நம்மிடத்தில் நீடிய பொறுமை உள்ளவராயிருக்கிறார்.[11]

மேலும்,

> **“சாந்தகுண முள்ளவர்கள் பாககியவான்கள்;**
> **அவர்கள் பூமியைச் சுதந்திரித்துக் கொள்வார்கள்”**[12]

சமூகத்தில் சிறப்புற்று வாழவும் நிலையான நித்திய வாழ்வினைப் பெற்றுக் கொள்ளவும் பொறுமை மிக அவசியம் என்பதை கற்றுக்கொள்ள முடிகிறது.

கோவேறு கழுதையில் விவசாய கூலிகளுக்கு கூலியாகச் சிறிய வருமானம் கிடைக்கும். அதுவும் இந்த தடவை இதுவரை களம் தூற்றியப் புது முறத்தால் சவுரி இரண்டு முறம் அள்ளி வேட்டியில் கொட்டினான். மூன்றாவது முறம் அள்ளப்போனச் சவுரியின் பிடியிலிருந்து முறத்தை அழகன் வாங்கி பிடுங்கியெறிந்தான்.

"போட வெளிய"
வயக்கமா மூணுதாங்களே அள்ளுறது?"
அதெல்லாம் அந்த காலம் நீ கியிச்ச
கியிப்புக்கு ரண்டு போதும் போடா"

இந்த ஊர்லேயே உங்களுக்குத் தாங்க நம்பி இருக்கம். நீங்கள் இப்படிச் செஞ்சா, மத்தவுங்க என்ன பண்ணுவாங்க சாமி?"

"மசுரு பண்றான் விளையறதப் பூராத்தையும் உங்கிட்டே கொட்டிக்குடுத்துடுணுமா?"

"ஊர்ல புது வயக்கத்த உண்டு பண்ணாதீங்க சாமிமூணு மொறமாப் போடுவங்க சாமி"

"இனிமை ரண்டு தான் இஷ்டமிருந்தாத்தூத்து இல்லாட்டி அடுத்த வருஷத்துலயிருந்து நீ வர வாணாம்"[13]

வேலைசெய்து விட்டு கூலியைக் கேட்கும் போது வேலைக் கேற்ற கூலி இதுவரை கொடுத்துவிட்டு வந்த கூலி கூட கொடுக்க ஊர் மக்களுக்கு மனசுவரவில்லை சவுரி அவர்கள் கொடுக்கும் கூலியை பெற்று பொறுமையுடன் வீடு திரும்புகிறான்.

4. ஒழுக்கம்

சமூகத்தின் அடிப்படை தனிமனித ஒழுக்கமாகும். சமூகத்தில் கூடிவாழும் மனிதன் ஒழுக்கத்தைப் பேணிப்பாதுக்காக்கவிட்டால் சமூகம் ஒழுக்கமற்றதாய் மாறிவிடும். தனி மனிதன் ஒழுக்கம் உள்ளவனாய் வாழ்ந்து வந்தால் அச்சமூகமும் ஒழுக்கமுள்ளதாய் சிறந்து விளங்கும். ஆக சமூகம் ஒழுக்கமுள்ளதாய் சிறந்து விளங்க தனிமனித ஒழுக்கமே அடிப்படையாகும். நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோர் நன்மையினை அடைவார்கள். தீயொழுக்கம் புரிவோர் துன்பத்திற்கு உட்பட்டு வருந்துவார்கள். இல்வாழ்க்கையின் ஒழுகலாறு நல்ல நெறிகளைக் கடைப்பிடித்தலாகும்.

இதனை திருவள்ளுவர்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.[14]

என்ற குறளானது ஒழுக்கமானது உயிரைக் காட்டிலும் மேன்மையுடையதாக எண்ணி அதை போற்றவேண்டும் என்று கூறுகிறது.

ஒழுக்கமின்மையால் பல்வேறு குற்றங்கள் சமூகத்தில் நடைபெறுகிறது. சான்றாக பாலியல் தொல்லைகள். இதைப்பற்றி திருவிவிலியத்தில் நாம் பார்க்கும் போது விபச்சாரம் செய்வது பெரிய தவறு. அது மனித நேயத்திற்கு எதிரானது என்று இயேசுவின் காலத்திற்கு முன்னால் கூறப்பட்டது. இதிலும் இயேசு விபச்சாரம் செய்வது மட்டுமன்று, ஒரு பெண்ணைக் காமக்கண் கொண்டு பார்ப்பதே பாவம். அப்படி பார்ப்பதே விபச்சாரம் செய்வதற்குச் சமம் என்பதை,

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.[15]

என்று திருவிவிலியம் புதிய ஏற்பாட்டில் கூறுகிறது. கோவேறு கழுதையின் ஆரோக்கியத்தின் மகள் மேரி பாலியல் கொடுமைக்கு ஆளாகிறாள். சடையன் என்பவன் மேரி அழுக்கு துணியை எடுக்கப்போகும் போது வீட்டின் மூலையில் கிடைக்கும் துணியை நீயே போய் எடுத்துக்கிட்டுப் போ என்று சொல்லி யாருமில்லாத நேரத்தில் மேரியிடம் தப்பாக நடக்கிறான். மேரி மனத்திற்குள் மேல்நாரியப்பனூர்.

அந்தோணியாரை நோக்கி வேண்டுதலைச் செய்கிறான். மேரி எவ்வளவு எடுத்து சொல்லிப்பார்க்கிறாள். மேரியின் அழுகை இதோ:-

“வண்ணாத்தி சாமி
வாக்கப்படப்போறவ சாமி
சாதிக் குத்தமாயிடும் சாமி
உண்டாயிடும் சாமி
உசுரப் போக்கிப் பேன் சாமி
உங்களுக்குக் காலுக்குக் கும்பிடுறேனய்யா..
உங்க வவுத்துல மவளாப் பொறக்கறனய்யா
வேணுமின்னா என்னக் கொன்னு போடுங்கய்யா..
சுட்டுப்பொசுக்குங்கய்யா...”
“அந்தோணியாரே...
கடவுளே... அந்தோணியாரே.... மாதாவே”[16]

மேரியின் அழுகை குடிசையை அதிர வைத்தது.

வீட்டின் மூலையில் உயிரே போவதுப் போல அழுதாள். உடலின் ஒவ்வொரு பகுதியையும் பார்த்துப்பார்த்து அழுதான். ஓயாமல் அழுகை மேரிக்கு இது இயலாமையினால் அவமானத்தினால் உண்டான சமூகத்தில் வாழும் பெண்களின் சார்பாக அழும் அழுகையாக மேரிக்கு காணப்பட்டது.

இன்றைய சமூகத்திலும் சடையன் போன்ற ஆணாதிக்கத்தினால் உண்டாகும் பாலியல் தொல்லை மேரி போன்ற பெண்கள் வீட்டின் மூலையில் அழுதுக் கொண்டே தான் இருக்கிறார்கள்.

5. குறிக்கோள்கள்

இறைவனைத் தேடிச் சென்று இறை அருள் புரிய வேண்டும் என்பதே மனு குலத்தின் முக்கிய நோக்கமாகும். அதைப்போலவே திருவிவிலியத்திலும் பாவிகளை இரட்சிக்க, பாவிகளை நேசித்து அவர்களை அடியவர்களாக வேண்டும் என்றே இயேசு மானிட வடிவமாய் பூமிக்கு வந்தார்.

அதுமுதல் இயேசு மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்ற பிரசங்கிக்கத் தொடங்கினார்.[17]

என்று திருவிவிலியம் கூறுகிறது. கோவேறு கழுதையிலும் ஆரோக்கியத்திற்கு உச்சக் கட்ட குறிக்கோள் ஒன்று இருக்குமானால் எப்படியாவது மேல்நாரியப்பனூர் அந்தோனியார் கோவிலுக்கு குடும்பதோடு போக வேண்டும். அதற்கு கொஞ்சம் கொஞ்சமாக காசு சேமித்து காலணி மக்களிடம் கேட்டு அனுமதி பெற வேண்டும் என்பதை ஆசிரியர் இமையம் கோவேறு கழுதையில் கூறியுள்ளார்.

முடிவுரை

ஒடுக்கப்பட்டோர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக குரல் கொடுக்கும் எழுத்தாளர்கள் தோன்றி தலித் மக்களின் வாழ்வியலை தங்களின் படைப்புகளின் வழியேச் சொல்லும் நவீனச் சிந்தனை இன்றும் வளர்ந்து வருகிறது. இவ்வகையில் தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைக் குரல் கொடுக்கும் இலக்கியங்களைப் படைப்பதில் "இமையம்" என்ற படைப்பாளர் ஒரு தனித்த இடத்தைப் பெற்று வருகிறார்.

தொகுப்புரை

ஆசிரியர் இமையத்தின் படைப்பான கோவேறு கழுதைகள் என்ற புதினத்தில் கிறித்தவ சமய கருத்துக்கள் நிரம்ப உள்ளன. ஓய்வு நாளான ஞாயிற்றுக்கிழமை

ஆலயம் சென்று வழிபட வேண்டும். உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூற கடமைப்பட்டிருக்கிறோம். தனி மனித ஒழுக்கத்தை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். ஐம்புலன்களை அடக்கி ஆளவேண்டும். மனித வாழ்வின் குறிக்கோள் இம்மையை துறந்து மறுமையில் பேரின்ப வாழ்க்கையை நாட ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்ய வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. ஜகந்நாதன், கி.வா. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 1.
2. கைலாசபதி, க. தமிழ் நாவல் இலக்கியம், ப. 16.
3. மணிகோ. பன்னீர்செல்வம், பாவேந்தரும் விளிம்பு நிலைமக்களும், பதிப்புரை, ப. 35.
4. கோவேறு கழுதைகள், ப. 1.
5. எபிரேயர், 10:25.
6. ரோமர், 5:5.
7. 1 கொரிந்தியர், 13:4-6.
8. கோவேறு கழுதைகள், ப. 24.
9. மத்தேயு, 22:39
10. பிரசங்கி, 7:8
11. 1 பேதுரு, 3:20.
12. மத்தேயு, 5:5.
13. கோவேறு கழுதைகள், ப. 40.
14. திருக்குறள், 131.
15. மத்தேயு, 5:28
16. கோவேறு கழுதைகள், பக். 58-59.
17. மத்தேயு. 4:17.

துணைநூற்பட்டியல்

1. ஜகந்நாதன் கி.வா., தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், காந்தமாலை, சென்னை - 28. பதிப்பாண்டு 1966.
2. கைலாசபதி, க., தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பதிப்பகம், சென்னை - 26. பதிப்பாண்டு 1999.
3. பன்னீர் செல்வம், கோ., பாவேந்தரும் விளிம்பு நிலை மக்களும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், A1-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098. பதிப்பாண்டு ஆகஸ்டு - 2008.
4. இமையம், கோவேறு கழுதைகள் புதினம், கிரியா வெளியீடு, பழைய எண். 25, புதிய எண். 2, 17th கிழக்கு வீதி காமராஜர் நகர், திருவான்மையூர், சென்னை - 600 041.
5. பரிசுத்த வேதாகமம், இம்மானுவேல் பப்ளிகேஷன்ஸ், 20, சபாபதி தெரு, நர்மதா நகர், உள்ளகரம், சென்னை - 91.

REFERENCES

1. Jaganathan Ki Wa., Origin and development of the Tamil novel, Kantha Mall, Chennai.19966
2. Kailasapati. K., Tamil Novel Literature, Kumaran Publishing House Chennai-26, Year of Publication-1999.
3. Panneerselvam. Co., Bavendar and Marginalized People, New Century Book House Limited, CITCO Industrial Estate, Ambattur, Chennai - 600098, Aug-2008.
4. Center, Mules are Novelty, Kriya Release, The old number is 25, Kamaraj Nagar, Thiruvanmiyur, Chennai - 600041.
5. The Holy Bible, Emmanuel Publications, 20, Sabapati Street, Narmada Nagar, Chennai 91.